## பாணந்துறை நகர சபை
## களுத்துறை மாவட்டம்

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 04 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாணந்துறை நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய மூலதன மானியத் தொகை ரூபா 2,001,906 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,496,759 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக வருமானச் செலவினக் கணக்கில் மூலதன மானியத் தொகை ரூபா 494,853 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் நாட்குறிப்புப் பதிவு 31 இன் மூலம் ரூபா 255,769 தொகையான பிழையான பதிவொன்று உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கணக்கில் வரவு வைத்தமையாலும் 2013 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் ரூபா 43,357 தொகையான கடன் தவணைப்பணம் அக் கணக்கில் வரவு வைக்கப்படாமையின் காரணமாகவும் கடன் கணக்கின் மீதி ரூபா 212,412 தொகை குறைவாகக் காண்பிக்ப்பபட்டிருந்தது.

(இ) திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கைத்தொழில் கடன்பட்டோர் செலவு மீதி ரூபா 247,426 ஆக இருந்ததுடன் அது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கின் செலவு மீதி ரூபா 119,842,037 ஆக இருந்த போதிலும் அது ரூபா 120,049,054 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் திரண்ட நிதியக் கணக்கின் செலவு மீதி ரூபா 207,017 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) தொங்கல் கணக்கில் ரூபா 207,017 தொகையான செலவு மீதி நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டில் மாகாண குறித்தொதுக்க செயற்திட்டத்தின் பணப் பெறுவனவுடன் பெறுமதி சேர் வரியான ரூபா 247,427 தொகை கிடைத்திருந்தும் கணக்காய்வுத் திகதியான 2015 பெப்ரவரி 18 ஆந் திகதி வரையிலும் அதனை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் போது கைத்தொழில் கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 11,968,569 தொகைக்குரிய எந்த சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், ஏற்பாடுகள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

(i) நிதிப்பிரமாணம் 371(அ) இன் பிரகாரம் எந்தவொரு பணிக்காகவும் வழங்கப்பட்ட முற்பணத் தொகை அந்தப் பணி நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 1990 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 1,110,064 தொகையான முற்பணம் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய காசோலைகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் ரூபா 16,360 தொகையான 07 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 நவம்பர் 28 அந் திகதிய திறைசேரிச் சுற்றறிக்கையின் IAI/2002/02 ஆம் இலக்கத்தின் பிரகாரம் கணனி, துணைப் பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 588,000 பெறுமதியான 3 கணனித் தொகுதிகளின் பெறுமதி பதியப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,428,682 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 48,363,261 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 நிலுவை வருமான

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 10,820,361 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255) ஆம் அத்தியாயத்தின் 160, 165, 170 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 ஆதனவரி

(அ) மீளாய்வாண்டின் ஆதனவரி பற்றுச்சீட்டில் ரூபா 40,122,329 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் ரூபா 24,049,421 தொகை அதாவது 59.9 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை ஆதனவரி மீதியான ரூபா 27,948,654 தொகையில் ரூபா 18,002,004 தொகை அதாவது 64.4 சதவீத அளவு அறவிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவை ரூபா 26,019,557 ஆகும்.

### 2.2.3 கடை வாடகை

(அ) 2014 ஆம் ஆண்டினதும் அதற்கு முன்னைய ஆண்டுகளினதும் நிலுவை மீதியான ரூபா 708,687 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 08 ஆம் இலக்க மீன் கடையில் அனுமதியற்ற வேறொரு வெளிநபர் வியாபாரம் செய்துகொண்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தும் சபையின் மூலம் கணக்காய்வுத் திகதியான 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் கடையைக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 அறிவித்தல் பதாதைக் கட்டணம்

(அ) 2015 ஆம் ஆண்டின் போதான மெய்மையாய்வின் மூலம் இனங்காணப்பட்ட 41 அறிவித்தல் பதாதைகளிலிருந்து ரூபா 588,849 தொகை கிடைக்க வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் அந்த வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட 20 அறிவித்தல் பதாதைகளுக்குரிய அறிவித்தல் பதாதையின் அளவு மற்றும் அறவிடவேண்டிய தொகை என்பன மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) அந்த 61 மெய்மையாய்வு அறிக்கைகளுக்குரிய தகவல்கள், அறிவித்தல் பதாதை வருமானப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 38,600,000 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

(அ) சபையில் சேவையாற்றி பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 101,023 தொகையான கடன் மீதியை 2016 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களினது பங்களிப்புப் பணம் அரசாங்க சேவை ஊழியர் சேமலாக நிதியத்தின் செயலாளருக்கும் கணக்காளருக்கும் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாது ஊழியர் சேமலாக நிதியத்திற்கு தாமதமாக அனுப்பப்பட்டமையின் காரமாண ரூபா 1,055,546 தொகை மிகைக் கட்டணமாக அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2016 பெப்ரவரி 18 ஆந் திகதி வரையிலும் அந்த நிதியத்திலிருந்து ரூபா 360,000 இரண்டு தவணைகளுக்காக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

(அ) கைவிரல் அடையாள இயந்திரத்தில் பதிவு செய்யப்பட்ட சரியான வெளிச்செல்லும் நேரமாக கருதப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 03 மாதங்களில் கடமை நேரத்தின் பின்னர் 2 மணித்தியாலங்களுக்கு குறைவாக திட்டமிடல் குழுக்கூட்டம் நடாத்தப்பட்ட தினங்களின் எண்ணிக்கை 10 ஆகக் காணப்பட்டதுடன் அதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 திசெம்பர் 15 ஆந் திகதிய LG/07/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 45,900 தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2010 செப்தெம்பர் 09 ஆந் திகதிய உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர், பிரதி தலைவர் அல்லது உறுப்பினர் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தெரிவு செய்யப்படுவார்களாயின் உரிய அமைப்பு அல்லது வெளிநாட்டு அரசாங்கம் அல்லது வெளிநாட்டு நிறுவகம், அல்லது அதற்காக செலவாகின்ற சகல செலவினங்களையும் வசதிகளையும் செய்ய வேண்டியிருந்த போதிலும், சபையின் நகர சபை உறுப்பினரொருவர் 2015 பெப்ரவரி 07 முதல் 13 ஆந் திகதி வரை 07 நாட்களுக்கு வியட்னாம் சுற்றுலாவிற்கான விமானப் பயணச்சீட்டு கட்டணம் மற்றும் அமைய படிகளாக ரூபா 320,000 தொகையும் இணைந்த படிகளாக ரூபா 56,700 தொகையும் சபையின் மூலம் செலவிடப்பட்டிருந்தது.

3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

(i) 2015 இன் முதல் 05 மாதங்களுக்காக மொறட்டுவ மாநகர சபையினால் கழிவுகள் அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2015 மே மாதம் வரை அதற்காகச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 840,336 மாத்திரமாக இருந்ததுடன் மேலும் செலுத்த வேண்டிய ரூபா 325,390 தொகைக்காக கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாதாந்த சராசரிச் செலவினம் ரூபா 233,145 தொகை மாத்திரமாக இருந்தது.

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை அகற்றுவதற்காக 2015 யூலை 20 ஆந் திகதி முதல் 06 மாத காலத்திற்காக தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

தனியார் நிறுவனம் கழிவுகளை அகற்றி 03 மாதங்களுக்கு அண்மித்த கால எல்லைக்காக மாத்திரம் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 7,266,000 ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் மாதாந்த சராசரி ரூபா 2,422,000 ஆக இருந்தது. இது மொறட்டுவ மாநகர சபையினால் கழிவுகளை அகற்றுகின்ற காலத்திற்குரிய செலவினத்தில் மாதாந்த சராசரியைப் போல 939 மடங்கினால் உயர்வடைந்திருந்தது. இது நகர சபை போன்ற நிறுவனத்திற்கு மிகவும் பொருளாதார ரீதியற்ற செலவினம் என்பது கணக்காய்வின் கருத்துரையாகும்.

(ii) கழிவு மாற்றீடு நிலையங்களுக்கு எடுத்துவரப்படுகின்ற கழிவுப் பொருட்களின் டெக்ரர்களின் எண்ணிக்கை அல்லது அளவு தொடர்பாக அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) கழிவுகளை அகற்றுதல் எந்தப் பிரதேசத்தில் அகற்றப்படுகின்றது என சபையினால் ஆராயப்படாதிருந்ததுடன் இது சுற்றாடல் ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருந்தது.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | பற்றாக்குறை |
|---|---|---|---|
| நிறைவேற்று | 8 | 4 | 4 |
| இரண்டாம் | 64 | 59 | 5 |
| கனிஷ்ட | 228 | 216 | 12 |
| மொத்தம் | 300 | 279 | 21 |

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்